559

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத தாள

17 NOV 1954

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. புரட்டாசி, ௨௯ 15—10—54 தளிர்—2

## சிவகதி விளையும்

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிச் சண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே.

(அப்பர்)

உலகத்தில் உலவுகின்ற பல்வேறுசமயங்களுள் பெரும்பான்மையானவை காலத் தன்வழி வரம்பேற்றுக் கிடப்பன. கிறித்துவம் பௌத்தம் முதலிய பிற சமயங்கள் தோன்றிய காலங்களைச் சரித்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

சைவ சமயம் சரித்திரக் காலத்தைக் கடந்து நிற்பது; அதன் காலவரை அளவிடற்பாலதன்று. அஃது மன்பதைக் குரிய சமயமாகவும் பயன்பட்டு வந்தது. முன்னைப் பழமைக்குப் பழமையாயும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாயும் இலங்குஞ் செம்பொருளின் தொடர்புடையது சைவ சமயம்.

பழமையோடு பொருளுண்மையும், சமரசமும், அன்பும், உயிர்களிடத்து இரக்கமும் விளங்கும் ஒரு சமயம் அப்படி நிலவுமேல் அஃது அறிஞர்தம் உடைமையாவதோடு போற்றவும் படும்.

சைவத்தை அன்புச் சமயம் என்றும் கூறலாம். சிவம்—அன்பு. சிவ சம்பந்தம்—அன்பு சம்பந்தம்; எனவே, அன்பே சிவம், எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்துவதே சைவம் செலுத்துவோர் சைவர்.

விபூதி தூய்மையைக் காட்டுவது 'பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்றார் சேக்கிழார். உருத்திராக்ஷம் சிவபெருமானின் திருவருட் கண்ணினின்றும் பிறந்தது என்று புராணங்கள் கூறும். அதாவது அன்புக் கண்களின் கண்ணோட்டம்; எனவே உருத்திராக்கம் இரக்கத்தினைக் காட்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாத திருக் கூட்டத்தினர் என்பதனை விளக்கும் புறச் சின்னங்களே நீறும், கண்டிகையும்; சுருங்கக் கூறின் அன்புநெறி நிற்போர் அனைவரும் சைவரே.

காலமும்பலவுங் கடந்து சமரசத்தைப் போதித்து, அன்பு நெறியை விளக்கி, உயிர்கள் வழிபாட்டினை அறிவுறுத்தி விளங்கும் நந்தம் சைவசமயம் விளங்குக! ஆங்காங்கே அடியார் திருக்கூட்டங்கள் சாத்திரப் போதனையும், தொண்டும் செய்துகொண்டு அருளில் நின்றவரின் ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த இன்ப அன்பு விளக்கும் இறைவனின் தண்ணருள் இங்கும் நிலவும் என்பதில் ஐயமில்லை.

'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளிநாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | செய, புரட்டாசி, | தளிர் |
|---|---|---|
| 7 | 15-10-54 வெள்ளி. | 2 |


## விருந்தோம்பல்

நமது செந்தமிழ் நாட்டின் தனிப் பண்பு இது! நமது நாட்டில இல்லறம் என்றால், அதன் முதன்மையான செயல் விருந்தோம்பல்தான். 'இல்வாழ்வதெல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று இவ்வுண்மையைத் தமிழ்வேதப் பெரியார் திருவள்ளுவர், தெளிவாகவே தெரிவித்திருக்கிறார். திருமணம் புரிந்து குடித்தனம் செய்வார் ஒவ்வொருவரும் இக் கருத்தில் உறுதியாய் இருக்கவேண்டுவது கடமை.

குடும்பங்கள் மட்டுமல்லாமல், குருகுலங்கள் போன்ற அமைப்புகளும் விருந்தோம்பலில் கருத்தாயிருப்பது கட்டாயமாகும். வருவார் போவாரும், நண்பரும், உறவுகொள்வோரும், எல்லா அமைப்புகளையும் வளமாக்கவும் நன்கு நடத்தவும் ஏதுவானவர். இளம்வயதிலேயே குருவை அணுகி, அவரிடமே தங்கித் தொடர்பாக நற் பயிற்சிகள் செய்துகொள்வதற்குக் குருகுலங்களில் உணவு விடுதி போன்ற விருந்தோம்பல் முறை மிகவும் தேவை.

விருந்தோம்பல் நடக்கும் அளவுக்கு, அமைப்புகளும் ஓங்கும். திருவள்ளுவர் கூறிய அதிகாரங்களில் விருந்தோம்பல் அதிகாரமும் ஒன்று. இந்த அதிகாரம் நன்றாக நடைபெற வேண்டும், திருக்குறள் செயலகமாகிய நமது மாம்பாக்கம் குருகுலத்திலும்!

இப்போது இதற்கும் திருவருள் துணைசெய்துள்ளது. காட்டாம்பாக்கத்தில் மிக்க முயற்சியுடன் உழைத்து வாழும் நற்செல்வர் வளத்திரு வரதா ரெட்டியார் அவர்கள்! நமது குருகுலத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள்; ஏழை எளியவர்களைக் காணும்போது உடனே உள்ளம் நெகிழ்ந்து உதவும் கருணையுடையவர்கள்; திருக்கூட்டங்களில் விழாக்கள் நடக்குங் காலங்களில் ஆயிர ஆயிரக் கணக்கில் நல்லவர்கட்கும் ஏழைகட்கும் நல்லுணவு கொடுத்து 'விருந்தோம்பும்' வேகமும் பழக்கம் உடையவர்கள்; அதில் அவர்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சி! குழந்தை யுள்ளம் படைத்தவர்கள் அவ்வகையில்!

அத்தகைய இரக்க உள்ளமும் பெருவளமும் படைத்துத் திகழும் திருவாளர் வரதா ரெட்டியார் அவர்கள், திருக்குறள் செயலகமாகிய மாம்பாக்கம் குருகுலத்தில் விருந்தோம்பல் அதிகாரம் செயல் செய்ய மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்; குருகுலமும் நாடும் மகிழத்தக்க செய்தி இது!

திருமிகு வரதா ரெட்டியாரவர்களின் நல்வாழ்க்கைத் துணைவியார், திருமதி ஜெயலக்ஷ்மி அம்மையாரவர்; சிவநேயமும் அடியார் நேயமும் மிக்க செம்மனச் செல்வியார் இவர்கள்; புண்ணியமும் புகழுமிக்க இவ்வம்மையாரும் இவ்வகையில் இணக்கமும் மகிழ்ச்சியும் உடையவர்கள்!

திருமிகு ரெட்டியாரவர்கள் விருந்தோம்பல் செய்கை செய்ய மகிழ்ச்சியுடன் முன்வந்திருப்பது பெரியதோர் வாய்ப்பு. இச்செயற்கருஞ் செய்கைக்குக், குருகுலத்தின் வாழ்த்து அவர்க்கு உரியது!

வாழி அவர் நல்லறமும்
நற்புகழும்!

# சாலையின் சாலையிலே

(—கி. ஜானகிராமன்.)

வாழ விரும்பும் மானிடனெவனும் வருங் காலத்தைச் சற்று நிமிர்ந்து நோக்கித்தான் செல்கின்றானெனினும், எதிர் காலத்தில் அவன் தன் வாழ்விலே இன்பமழையைத்தான் காண்கின்றானே யன்றித் துன்பச் சுழலைக் காண்கின்றானில்லை. தான் கற்பனை செய்யும் எதிர் காலத்தை மிகச் சிறந்ததொரு சுக வாழ்வளிக்கும் சொர்க்கமாகக் கருதுகின்றான். தான் பிறந்தது முதல் அடைந்த இன்ப துன்பங்கள் யாவும் பெரிதாகத் தோன்றவில்லை. கால் வயிற்றுக் கஞ்சிக்குக் காசில்லா விட்டாலும் கற்பனையில், கட்டத்தைக் காண மறுக்கின்றான். இதுதான் மனிதப் பிறவியின் மாண்பு.

ஆனால், இளம் வயதிலேயே இன்பம் தேடி, உழைக்கும் வயதிலே ஊர்சுற்றி வந்து, படிக்கும் வயதிலே பாவையரைச் சுற்றிப் பொன்னான காலத்தைச் சின்னாபின்னமாக்கி எதிர்கால வாழ்க்கையை ஒளியே இல்லாத உவமைக்கு, எட்டாத தவிர்க்க முடியாத காரிருள் பாதையாகச் செய்துகொள்ளும் பழக்கம் உடையோர் சிலரும் சீவிக்கின்றனர். அதிலும் சிறப்பாக எதிர்காலத்தே மாண்புமிக்க செயல்களை ஆக்கவல்ல மாணாக்கப் பருவத்திலேமட்டற்றமகிழ்ச்சியுடன் மனம் விரிய—கலை தெரிய—அறிவு வளர—அன்பு பெருக—அவசிய நூல்களை ஆசானாகிய ஒளியின் உதவிகொண்டு கற்றிடாமல், கட்டவிழ்த்த காளைபோல் கண்ட இடம் சுற்றிப் பிஞ்சிலே தனது வாழ்வினை வெதும்பவைக்கும் சிறாரைத்தான் குறித்தல் வேண்டும்.

முட்டாள் என்றும் மூடன் என்றும் ஏசப்படும் ஒருவன் பிறவியிலேயே அறிவிலியாகத்தான் இருக்கிறானா? வெட்டியெடுக்கும் வைரம் விதவித வொளி வீசுவதில்லையே— தோண்டியெடுக்கும் தங்கம் துல்யமாய் இருப்பதில்லையே— மண்ணின் வெள்ளி மாசற்று இருப்பதில்லையே நில மகளை விட்டு வெளிவந்து கலை மகளைத் துணைக்கொண்ட கற்றறிவாளராய்ச் சிறந்த ஒளியும், உயர்ந்த மதிப்பும் பெறுகின்ற உயர்ந்த பொருள்களையொத்ததுதான் மனிதனது மனமும் மதியும்.

குழவிப் பருவத்திலே மாசு மறுவற்று விளங்கும் இதயமும் அறிவும், களங்கமுற்று விளக்கமுறாமல் மங்குவதேன்? பசுமரத்தாணிபோல, இளவயதின் நிகழ்ச்சிகள் யாவும், பழக்கங்கள் யாவும், மனதில் படிகின்றன. பெற்றோர், உற்றார், சுற்றம், சூழ்நிலை இவையே மனமாற்றத்திற்கு முதல் காரணமாக இருக்கின்றன. இளம் வயதிலே இதயத்தைப் பண்பட்ட மக்கள்பால் இணக்கிப் பழகி வரும் சிறுவர்கள் வாழ்க்கையிலே சிறந்து ஒளிரும் வைரமாக, அது, இருத்தல் நீதியே.

பெற்ற செல்வத்தினைப் பாலூட்டி வளர்த்துப் பட்டாடை யுடுத்துப் பாங்குடன் பள்ளிக்குப் பல கனவுகளுடன் பரிந்தனுப்புகிறாள் தாய். தன் மகன் சான்றோனாய்த் திகழத் தவிர்க்க முடியாத துன்பங்களைத் தாங்கி மகனின் கண்ணை நினைந்து ஏங்கி நிற்கின்றான் தந்தை. இந்நிலையே, சிறந்த முறையிற் கல்வி பயிலும் பச்சிளம் உளத்திலே, தங்கத்திற் செம்புபோல், பகையும் பொருமையும் வளரத் தொடங்கி, கூடாப் பழக்கமும் கூடி, தீயோர் சேர்க்கையில் சுவை கண்டு சீர் கெட்டுவிட்டான் பிள்ளைஎன்றால், பெற்ற மனமும், வளர்த்த வயிறும் பற்றி எரியாவோ? சீர் கெட்டுத் திரியும் சிறுவர்கள் இதைச் சிந்திப்பதில்லையே.

ஆசானும் பெற்றோரும் ஆக்குவித்த வழிச் சென்றால், ஆரம்பத்தில் அதிக இடர்ப்பட வேண்டியதானாலும் அதன் முடிவிலே இன்பக் காட்சிகள் காண முடியும் ஒன்பது உறுதி.

எழில் மிக்க கன்னி,—இன்சுவை அமுதுண்டு—மஞ்சத்தினின்றும் இறங்காது மாறி மாறித் தாதிகளின் இடை இருந்தவள்—செல்வத்திலே வளர்ந்து சிறப்பான பருவம் அடைந்தவள்—கொடியிடையும், தளிர்க்கரமும், வேல் விழியும் தேன் மொழியும் உடையவள், எதிர் பாராது கரடு முரடான பாதையில் செல்கிறாள். காரணம் என்னை? பெற்றோர் பெற்ற பொருள் குறைந்ததா? பாவையின் உள்ளம் உலகினை உதறியதா? இரண்டுமல்ல. தன் வருங் கால இன்பத்தை நோக்கி, தொலைவில் தோன்றும் சோலையை நோக்கி, அரைகுறையாகக் கேட்கும் குயிலின் குரல் நோக்கி நடக்கிறாள்.

அவள் தன் வாழ்வினை மலர வைக்கப் போகும் வாலிபனைத் தேடிக் கிளம்பிவிட்டாள். பாதையோ கரடு முரடானது.

மெல்லிய பாதத்தைக் கண்ட சிறு கற்கள் இறுகத் தழுவிக் கொண்டன. வலி தாங்காது மான்விழி மருள இரத்தினக் கம்பளத்தில் நடனமாடிய பாதங்களை வருடிவிடுகிறாள். பூப் பாதம் கண்ட முட்கள் புளகாங்கிதமடைந்து அதைப் பிரிய மனமின்றிப் பின்பற்றுகின்றன. மலரின் அல்லி வட்டத்தின் கடினங்கூடக் காணா அப் பேதையின் கால்கள் முட்களால் பிணைக்கப்படுகையிலே பாவையின் உடல் பதறியாடுகிறது. நிமிர்ந்து நோக்குகிறாள்; தூரச் சோலை கண்ணுக்கு விருந்தளிக்கின்றது. அதைப் பற்றி நினைக்கிறாள்—ஆடும் மயில்கள், பாடும் குயில்கள், ஓடும் மான்கள், ஒய்யாரச் செடிகள்—இதை நினைக்கும் கணமே தன்னை மறந்து நடக்கிறாள். மாளிகையில் நடந்த மங்கை மாளாத் துயர மிகு பாதையில் நடப்பதைக் கண்டு நகைக்கின்றான் கதிரவன். அவனது சிரிப்பொலிக் கிரணங்கள் மங்கையின் முகத் தாமரை மீது விரைவுடன் விழும் பொழுது, அது சற்றே வாட்டமுறுகிறது.

இந்நிலையிலே சென்ற அவளுடைய முகத்திலே எங்கிருந்தோ மகிழ்ச்சி வந்து குடி கொள்கிறது. கால்கள் சற்றுத் தெம்படைகின்றன. வேகமாக விரைகிறாள்; விரைகிறாள், சற்றுத் தொலைவில் நிற்கும் தன் காதலனை நோக்கி. ஆ! மீன் விழியாளைத் தளிர் நடையாளைக் காதலன் கண்டதும், நடந்து வந்த அதிர்ச்சியால் சற்றுச் செந்நீர் சுரந்து நின்ற பாதங்களை நோக்குகின்றான். அணைத்துக் கையில் அவ் வன்னத்தைத் தூக்குகின்றான். அவளது இதழ்க் கடையோரம் புன் முறுவல் பொலிகிறது. உள்ளத்திலே சொல்லொணாக் கலக்கம். இவன் நம்மை அவ் வெழியில் மிக்க காவிற்கே தூக்கிச் செல்வானா, அன்றி வண்ண மலரை நுகர்ந்து கசக்கி எறிந்து விடுவானா என்ற இயற்கையானதொரு பயம் அவள் இதயப் பூவை மொய்க்கின்றது. சந்தேகங் கொண்டொரு முறை, சாகசங் கொண்டொரு முறையாக நோக்குகிறாள்.

அவன் அவளை இறுதியில் எதிர் பார்த்த அச் சோலைக்கே தூக்கிச் சென்று, பஞ்சணையன்ன இயற்கை விரித்துள்ள பசும் புற்றரைமீது இறக்கி விடுகிறான். முட்களாலும், கற்களாலும் அணைக்கப்பட்ட பாதங்களுக்கு ஒத்தடம் கொடுத்தாலன்ன இதமாக இருந்தப் புற்றரை. சற்று நிதானித்து அங்குக் கண்ட காட்சிக்கும், இங்குக் காணும் காட்சிக்கும் உள்ள வேற்றுமையை நினைக்கிறாள், துன்பப்பட்டு இன்பங் கண்ட மங்கை நல்லாள்.

ஆங்கே கரடுமுரடான பாதை; இங்கே மிருதுவான பசும் புற்றரை;— கதிரவன் வெம்மைக்குப் பதில் சிறுநீர்த் திவலைகளைச் சுமந்து வரும் குளிர்காற்று;— தண்ணீரகக் காணாப் பாதைக்குப் பதில் அன்னநடை போடும் சிற்றருவிகள்— அது மட்டுமா அவளுடன் போட்டியிட எத்தனைப் பேர்கள். குரலுடன் போட்டியிடக் குயிலும், நடையுடன் போட்டியிட அன்னமும், நடனத்தைப் பழிக்க நினைக்கும் மயிலும், எம் விழி உனக்குண்டா எனும் மானினங்களும், அவள் பற்களைப் பார்க்கும் முல்லை மல்லிகையும்; சிரிப்பை எதிர்க்கும் பூத்துக் காய்க்கும் குலுங்கும் சிங்கார மரங்களும், விரல்களைக் காணும் மாந்தளிர்களும், இதழினை நிகர்க்கும் கொவ்வைப் பழமும், முகங் காணும் தாமரையும் இன்னோரன்ன பற்பல புதியருடன் அவள் பழகவேண்டும். உதவி புரியப் பக்கத்துணைக்குக் காதலன் வேறு. குறையென்ன மங்கைக்கு; எதிர்பார்த்த இன்ப வுலகை அடைந்து விட்டாள்.

இதே நிலையில் மங்கைக்குப் பதில் மாணவன், கரடு முரடான பாதைக்குப் பள்ளி வாழ்க்கை, காதலனுக்குப் பதில் கல்வித் தேர்வு; சோலைக்கு மாறாக எதிர்காலச் சூழல்! இவற்றை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கையிலே உண்மை விளங்கும்.

வீட்டிலே இட்டம் போல் இருந்து காட்டுக்கிளிபோல் சுற்றியவனைப் பள்ளிப் பாதையிலே செல்லவிட்டால் இடையிலே பாடங்கள், கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகள் இவையனைத்தும் முதலில் முட்களாகவும் கற்களாகவும் தோன்றும். ஆனால் எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்துத் தேர்வை நோக்கிப் படிக்கத் தொடங்கினால் – கண்விழித்துப் படித்து, கட்டப்பட்டுக் கணக்குப் போட்டு– தேர்ச்சியை நெருங்குகையிலே காதலைக் கண்ட மங்கையாகின்றான். சோதனையில் எத்துணை நன்றாக விடையிறுத்திருந்தாலும் முடிவுதெரியும் வரை இனந்தெரியாக் கவலை உள்ளமதில் உருப்பெறுகிறது. தான் படித்த, எழுதிய அளவிலே ஓரளவு நிச்சயப்படுத்திக் கொண்டாலும் முத

லாகத் தேரும் மாணுக்கருக்கு தேர்வுகுறித்து உள்ளூர ஒரு கவலை இருக்கத்தான் செய்யும். தேர்ச்சியைப் பெற்று நல்ல முறையிலே வாழ்வைத் தொடங்க வேண்டியிருக்கிறது. நம் பிக்கை யன்னம் நடந்துவர, முயற்சி முகில் நடனம் ஆட, உண்மைக் குயில் ஊத்துப் பாட, சத்தியத் தென்றல் தவழ்ந்து வர, அன்பு அருவி அசைந்தோட, அறச் செயல் மரங்கள் பூத்துக் குலுங்க........ ஆம்! அவன் வாழ்க்கைச் சோலையை அமைத்து விட்டான் சோலையிலே சுற்றித் திரிய வெற்றி கொண்ட கலை தேர்ச்சி உதவி புரிகிறது.

துன்பத்தில் உழன்று இன்பம் துய்த்தல் நன்று? இன்பத்தில் திளைத்துத் துன்பத்தில் மூழ்குவது மேலா? மாணவராகிய நீங்களே இதைத் தெரிந்துகொள்ளுங்கள். நாவிற்குக் கசக்கும் பாகற்காய் உடலுக்கு நலம் பயக்கின்றதல்லவா? சாலைப் பாதைச் சற்றுச் சங்கடமானலும் சுகமே சுரக்கும் இறுதியிலே! (வயது வந்து, சாந்துணையும் கற்கும் நன் மாணவர்க்கும் உதவியாம்படி, மேற்குறித்த உவமை எடுத்துக் காட்டப் பெற்றது)

---

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

## கருதத் தக்கவை:

இங்கிலாந்தில்:

தலைநகராகிய லண்டனின் பிக்கா டில்லி சர்க்கஸ், ஹைட் பார்க், பிரிட்டிஷ் மக்கள், பாதாள ரயில்வே, போலீஸ்.

குறிப்பு:—பிரிட்டன் என்பது தமிழ் நாட்டுக்கு நிகரான நிலப்பரப்புள்ளது; ஒரு தீவு. முன்னைச் சென்னை மாகாணத்தின் மக்கள் தொகை கொண்டது பிரிட்டனின் தலைநகர் லண்டன். இது உலகத்தின் நடுநாயகமான இடம் (Hub of The universe) இந்த நகரம் 60 கல் தொலைவு வரை பரவியிருக்கிறது. உலகத்திலேயே சிறந்த தையற்காரர்கள் இங்கு உள்ளனர்.

பிரிட்டன் புகழுக்குக் காரணம் பிரிட்ஷ் மக்கள்.

| | | | |
|---|---|---|---|
| உலகத்திற் சிறந்த | பல்கலைக் கழகம் | இங்குள்ள | 'ஆக்ஸ்போர்டு' |
| ,, ,, | பாராளுமன்றம் | ,, | பிரிட்டிஷ் பாராளுமன்றம் |
| ,, ,, | நீதி மன்றம் | ,, | பிரிட்டிஷ் பிரிவி கவுன்சில் |
| ,, ,, | பத்திரிகை | ,, | 'ப்ளீட் ஸ்ட்ரீட்' இதழ்கள் |
| உலகத்தின் | கால அளவுக்கு | ,, | 'கிரீன்விச்' கடிகாரமே |

பிரிட்டிஷ் மக்கள் மிகவும் பொறுமையாளர்; 'பொறுத்தவர் பூமியாள்வார்' என்பது இவர்கள் வகையில் உண்மையாயிருக்கிறது. செய்வன திருந்தச் செய்வர்; இனிமையாகப் பேசி மகிழ்விப்பவர்.

உதாரணமாக:

1. தங்க வைரச் சுரங்கங்கள் தென்னாப்பிரிக்காவில்;
   இவற்றை வாங்குவது அமெரிக்காவில்;
   ,, அறுத்து மெருகிடுவது பெல்ஜியத்தில்;
   ஆனல், ,, விலையிடுவது லண்டனில்!
2. பெட்ரோல் கிடைப்பது மத்திய கிழக்கு நாடுகளிலும் பர்மாவிலும்;
   விலையிடுவது லண்டனில்!
3. தேயிலை உற்பத்தி இந்தியாவிலும் இலங்கையிலும்;
   ,, சந்தைக்கு லண்டன்!
4. ரப்பர் கிடைப்பது இந்தியா, இலங்கை, மலேயா;
   விலை வரையறுப்பது லண்டனில்!

வாக்கு நயத்தால் இவற்றிற் கெல்லாம் வாணிபம், லண்டன் வாயிலாகவே நடக்கிறது.

அரச குடும்பத்தில் அன்பு, கட்டுப்பாடு, வரிசைமுறை அதாவது ஒழுங்கு, தாம் பேசுவதைவிடக் கேட்டலில் விருப்பம், இவை பிரிட்டிஷ் மக்களின் சிறப்பு!

பிரிட்டனில் இல்லாதவை:

நாட்டைக் காட்டிக் கொடுப்போர், அரசியற் புரட்சி, தோல்வி மனப்பான்மை, தங்கம், நகைச்சுவை.

பிரிட்டனின் இணையற்றசெல்வம், ஷேக்ஸ்பியர் நாடகங்கள்.

# இன்பமும் துன்பமும்

(அ. கு. காமாக்ஷியம்மையார் எம். ஏ.)

ஆணும் பெண்ணும் நன்மக்கள் சுற்றம் நட்பும் புடைசூழ வாழும் வாழ்க்கையில் இரவும் பகலும் போல் இன்ப துன்பங்கள் நிறைந்தே காணும். இன்ப துன்பத்தை விளக்கப்போனால் ஒன்றன் இன்மையே மற்றதன் இருப்பு என்றுங் கூறலாம். "இன்போ ரணுவாம் இடர் அதற்கு மாமலையாம்" என்று வாழ்வில் இன்பத்தைவிட துன்பமே பெரிது என்பர் ஒருசாரர்; "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்பது மற்றோர் மனப் பான்மை. எனவே இன்ப துன்பங்களும் அவரவர் மனோநிலைக் கேற்றவாறு மாறுகின்றன. ஒருவர்க்கு இன்பம் மற்றொருவர்க்குத் துன்பமாய்த் தோன்றுவதுமுண்டு. வயிறார உண்பது, வாயாரப் பேசுவது, கண்ணாரக் காண்பது, காதாரக் கேட்பது, உளமார உடுப்பது, மெய்யாரத் துய்ப்பது ஆகிய இவற்றையே பேரின்பமெனக் கருதுவாருமுளர். இவற்றையே இந்திரியாத்ம வாதம், லோகாயதம் போன்ற பெயர்களால் நம் சைவ சமய நூல்களும் குறிக்கும். இன்னும் சற்று உயர்ந்தோர் கலையின்பமே நிலையின்பம் என்று, இலக்கியம், இன்னிசை முதலியவைகளில் பேரின்பங் காண்பர். ஓமர்காயம் என்ற பாரசீகக் காவியத்தில் உமறுப் புலவர் இதனைப் பேரின்ப வீடு என்றே பெரிதும் புகழ்வர்.

"வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ."

(இது "கவிமணி"யின் மொழி பெயர்ப்பு. மூலத்தில் இலக்கிய கீதம் என்றிருப்பதைத் "தெய்வ கீதம்" என்று "கவிமணி"யவர்கள் மெருகிட்டுள்ளனர்.) இவர்களிலும் உயர்ந்த சான்றோர் சிலர் தன்னல மற்றுப் பிறர் நலம் பேணும் பெருந் தொண்டிலே பேரின்பங் காண்பர்.

அன்பர் பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே

(தாயுமானவர்)

இறைவன் அடியவரோ இறை பணி நின்று அவன் இன்னருளைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதிலே பேரின்பங் கண்டனர்.

"துன்பம் நம்மைத்
தொழாத நாட்கள்
இன்பம் நம்மை
எத்தும் நாட்கள்"

(அப்பர்)

இன்ப துன்பங்களாகிய பண்புகள் பல்வகை மெய்ப்பாடுகளால் அறியப்படும். இன்பத்தின் அறிகுறிகளாக முகமலர்ச்சி, உடல் வளர்ச்சி, புன்முறுவல், முறுவல், புன்சிரிப்பு, சிரிப்பு, பெருஞ்சிரிப்பு ஆகியவைகளும்; துன்பத்திற்கு அறிகுறிகளாக முகவாட்டம், உடற்சோர்வு, உடல் மெலிவு, நெட்டுயிர்ப்பு, கண்ணீர், கம்பலை முதலியவைகளும் குறிக்கப் பெறும்.

இன்பம் வருங்கால் திளைத்து மகிழ்தலும், துன்பம் வருங்கால் வாடி வருந்துவதும் உலகத் தியற்கை. எனவேதான் இன்பத்தைவிடத் துன்பமே வாழ்க்கையில் மிகும்போது மனமுடைந்து, உடல் நலிந்து வாழ்நாட்களையே குறைத்துக் கொள்வோருமுண்டு. துன்பம் நீக்கி இன்பம் விழைவதே மக்களியல்பு. ஆகையால் துயரைத் துடைக்குமுன், அதன் தோற்றக் காரணத்தையும் பலவாற்றான் ஆராய்ந்தனர்.

"அவா இல்லார்க் கில்லாகும்
துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்."

"இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்."

பொருளின் மீதுள்ள பேரவா நிறைவேறாத போதெல்லாம் துன்பம் வந்துறுத்தும். எனவே அவாவின் காரியமாகவே துன்பம் பிறக்கிறது. நம் பழவினை காரணமாக இன்ப துன்பங்கள் தோன்றின எனும் அருங் கருத்தைப் புறநானூற்றுப் பாட்டொன்று,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும்
அவற்றோ ரன்ன"

என்று அழகாய்க் கூறும்.

"இன்பம் இடரென்
றிரண்டும் வைத்தது
முன்பு அவர் செய்கையினால்
முடிந்தது"

என்று திருமூலரும் கூறுவர். இக் கொள்கைதான் துன்பங்களைத் தாங்குவதற்குப் பெரிதும் துணைபுரிவது.

இவ்வாறு பல காரணங்களால் தோன்றும் துன்பத்தைத் துடைக்கும் வழியினையும் ஆன்றோர் காட்டிச் சென்றனர்.

இன்பம் வருங்கால் அளவுக்கு மீறித்திளைப்பவன் துன்பம் வருங்கால் அளவுக்குமீறி மனமுடைவதும் இயல்பு. எனவே இன்பம் வருங்கால் அதனைப் பெரிதாய்ப் போற்றாதவர் துன்பத்தின் சுமையையும் பொருட்படுத்தார் எனுமோர் நெறியினை வள்ளுவர் வகுத்துக் காட்டுவர்.

> "இன்பத்துள் இன்பம்
> விழையாதான் துன்பத்துள்
> துன்பம் உறுதல் இலன்"

இதனை மேற்குறித்த புறப்பாட்டும் (192-புறம்) வற்புறுத்தும்.

> "இனிதென மகிழ்ந்தன்று
> மிலமே முனிவின்
> இன்னா தென்றலு மிலமே"

இதனையே இருவினை யொப்பு என நம் சைவ நூல்களும் குறிக்கும்.

இன்ப துன்பங்களெல்லாம் மனத் தோற்றங்களே யன்றி வேறல்ல. "எல்லாவற்றிற்கும் மனமே காரணம்" எனும் முதுமொழியும் இதனை விளக்கும். இன்பத்தின் இருப்பிடமான வீடும் (மோக்ஷமும்) துன்பத்தின் உறைவிடமான அளறும் (நரகமும்) கூட மனத்தோற்றங்களேயன்றித் தனியிடங்க ளல்ல. இவற்றை இம் மண்மீதே காண்கின்றோம் என்பதனை,

> "கண்டின்று வீடுற்றேன்"

என்ற மணிவாசகமும் குறிக்கும். எனவே துன்பத்தை நீக்கிக் கொள்ளும் மருந்து மனத்திலேதான் உள்ளது. பெருந்துன்பம் அடைந்தபோதும், அதற்கு நாம் அஞ்சாது எதிர்க்கும் மனோதிடம் பெறவேண்டும்.

> "இடுக்கண் வருங்கால்
> நகுக அதனை
> அடுத்தூர்வது அஃதொப்ப தில்"

என்ற குறட்பாவில் 'அடுத்தூர்வது' என்பதற்குப் பாமர மக்கள் பேச்சிலே பொருள்காணின் 'ஏறி சவாரி செய்வது" என்றே கூறலாம். துன்பத்தை அடக்கி ஆள்வது அதைக் கண்டு அஞ்சாது சிரிப்பதேயாகும் என்பது வள்ளுவர் கருத்து 'வருங்கால்' என்ற சொல் உய்த்துணரற்பாலது. துன்பம் வரும்போது கவலையுறக் கூடாது என்றால் வருமுன்னரே ஏங்குவாரைப் பற்றி என் சொல்வது? இன்னும் வருவதாகக் கூறப்பெறும் துன்பத்தின் கவலையை ஆரூடம், ஜோதிடம் முதலியவற்றின் மூலமாக அரும் பொருள் கொடுத்து முன்னதாகவே வாங்குவாரைப் பற்றி என்னதான் கூறுவது? அச்சம் போன்ற ஆட்கொல்லி மக்களுக்கு வேறு கிடையாது. அஞ்சா நெஞ்சம் படைத்தோர்க்கு யமன் ஒரு முறையே வருகிறான். எதறகெடுத்தாலும் அஞ்சுபவர்க்கோ ஆயிர முறை வருவான்; அன்றாட.ச் சாவுதான் (Cowards die many a time) "அஞ்சி யஞ்சிச் சாவார்" என்று கூறுவர் பாரதியாரும்.

> "அஞ்சுவ தியாதொன்று மில்லை
> அஞ்ச வருவதுமில்லை"

என்றார் அப்பர் பெருமான். அவ்வரிய பண்பினை வாழ்க்கையில் நடைமுறையிற் காட்டியதையும் அறிவோம். நீற்றறையில் இடப்படுவதை நினைத்தாலும் நடுங்குமே நம் உள்ளம் அதனை நளினமிக்க குளிர்ந்த இடமாகக் கண்ட அப் பெருந்தகையின் உள்ளத்திண்மைதான் என்னே!

> வெள்ளத் தனைய இடும்பை
> அறிவுடையான்
> உள்ளத்தின் உள்ளக் கெடும்"

என்ற பொய்யாமொழியை மெய்யாக்கினர். இதனையே ஆங்கிலக் கவிஞர்—கண்ணிழந்து காணுமையாந் துன்பக் கடலைக் கண்டும் இன்பமே கண்ட புலவர் மில்டன் "இழந்த சொர்க்கம்" என்ற தன் அரிய நூலில், "மனமே வீடும் நரகும் அது சொர்க்கத்தை நரகமாக்கும். நரகை சொர்க்கமாக்கும்"

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

எனக் கூறினர். (The mind is its own place, and in itself, can make a heaven of hell, and helt of heaven"—Paradise Lost-Book I, lines 253, 254) இவ்வகையில் நம் மனதை மட்டும் பண்படுத்தி விட்டால், துன்பத்தைத் துடைத்து விடலாம்; ஆனல் இது எல்லோரும் எளிதிற் பெறும் இயல்பன்று. இதனை எளிதாகப் பெறும் வழி ஒன்றே ஒன்றுதான். நமக்குற்ற துன்பத்தினை நண்பரொருவரிடம் கூறிக் கொண்டாலே சற்றுக் குறைவதை உணர்வோம். அழுது ஆற்றிக் கொள்வோரும் உண்டு. அனைத்துயிர்களின் துயரச் சுமை தாங்கியான இறைவன், உறுதுணையாய் நிற்கின்ருன். இன்ப துன்பமில்லாத இறைவன், நாம் நம்பிச் சுமத்தினல் விரும்பி ஏற்கின்ருன் நம் துன்பங்களையும். இது பற்றியே,

"இன்பமும் துன்பமும்
இல்லானே உள்ளானே"

என்று மணிவாசகர் இறைவனியல்பைக் குறித்தார். அனைத்தும் அவன் செயலே யென்று அவனிடம் முறையிடுவர் அடியவர். ஆற்றற்கரிய துன்பம் நேரினும் போற்றற்கரிய பெருஞ்சோதனை என்று ஏற்றனர். இதனைப் பெரிய புராணம் பெரிதும் விளக்கும்.

"இடர்தனைக் கழிக்கவேண்டில்
இறைவனை ஏத்துமின்னே"

துன்பத்தில் இன்பம் நுகரவியலும். முத்தமிழின் முக்கூறுகளிலும் இன்பத்தைவிட துன்பத்தையே மக்கள் விரும்புகின்றனர். துன்பத்தைப் படம் பிடித்துக்காட்டும் இலங்கியங்களே நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். சோகப் பாடல்களே நெஞ்சை நெகிழ்விக்கும். இரக்கம் மிக்க நாடகங்களே இதயத்தைத் தொடுகின்றன. இவ்வாறு பிறர் துன்பங் கண்டு இரங்குவதால், நம் துன்பந்தாங்க வல்ல ஆற்றலையும், நம் துன்பங்களை நுகா நுகரப் பிறர் துன்பங் கண்டிரங்கும் பண்பையும் பெறுகின்ருேம். இது பற்றியே ஆன்ருேர், இல்லாத துன்பத்தையும் தாமே வருந்தித் தேடிக் கொள்வர். அரசைத் துறந்து ஆண்டியான புத்தர் பெருமான் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. உண்ணாமை, உறங்காமை, புலனடக்கம் முதலியன பயின்று நோன்பு நோற்றனர் பெரியோர். (நோன்பு—என்ற சொல்லின் பகுதியான 'நோ' என்பதே 'வருந்து' எனப் பொருள் படும்.) இவ்வாறு தம் செயற்கையாலோ இயற்கையாகவோ வரும் துன்பம் எனும் தீ சுடச்சுடப் பொன்போல் சானருேருள்ளம் ஆன்ம ஒளி வீசுமென்பர் வள்ளுவர்.

"சுடச் சுடரும் பொன்போல்
ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

உவமையின் சிறப்பு உய்த்துணர்ப்பாலது. பொன்னெனும் உயர்பொருள் ஒன்றுதான், தீயில் மேன் மேலும் தூய்மை பெற்று விளக்கமுறும். ஏனைய இழி பொருள்களோ வெந்து சாம்பராகும். எனவே இறைபணி நின்று இடுக்கணழியாது. இன்னருளால் பொன்போன்ற உயர்ந்த உள்ளத்தை மட்டும் பெற்றுவிடின் துன்பத்திலும் இன்பங் காணலாம்.

"தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

## முல்லைக் கொடி

(குருகுலக் கிழமை வெளியீடு)

புதிய ஆண்டு, இக் கலைமகள் விழாவிலிருந்து தொடங்கியது.

7-ம் கிளை

8-10-54 வெள்ளிக் கிழமையிலிருந்து வெளிவருகின்றது.

நேயர்கள், இந்த புத்தாண்டுக் கையொப்பத்தைப் புதுப்பித்துக் கொள்வார்களாக!

கண்காணிப்பாளர்.

பதிப்பு அச்சிட்டு வெளியிடுவோர், தி. க. பாலசுந்தரம், குருகுல [illegible] [illegible]பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)